ஆனால் நாம் அந்த முடிவை,
இறுதியை நோக்கிப்
பார்ப்போம்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: ஒரு மறைக்கப்பட்ட ஜீவியம்

# (A HIDDEN LIFE)

வியாழக்கிழமை பிற்பகல்,
அக்டோபர் 6, 1955
லேன்டெக் உயர்நிலைப்பள்ளி, சிகாகோ,
இல்லினாய்ஸ், அமெரிக்கா
55-1006A

5. தேவனாகிய கர்த்தருடைய இந்த மகத்தான அசைவுக்காகவும், இந்த - இங்கேயிருக்கும் இந்தக் கன்வென்சன் கூட்டத்திற்காகவும், இந்த பிலதெல்பியன் சபைக்காகவும், சகோதரன் போஸ்

அவர்களுக்காகவும், அவருடைய எல்லா உத்தியோகஸ்தர் குழுவிற்காகவும், சிகாகோ மற்றும் ஏறக்குறைய சுற்றிலும் உள்ள ஜனங்களுக்காகவும் நாங்கள் எல்லாரும் மிகவும் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். ஜனங்களாகிய உங்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

என்னுடைய அபிப்ராயத்தின்படி, அமெரிக்காவின் முதுகெலும்பை பாதுகாக்கிறவைகள் இங்கேயிருக்கும் இதைப் போன்று அப்படிப்பட்ட காரியங்கள் தான்.

அமெரிக்காவிலிருக்கும் நமக்கு உதவி செய்யும்படியாக இங்கே எந்த கர்த்தராகிய இயேசுவும் இல்லாமல் இருந்தால், நாம் எந்த அமெரிக்காவையும் கொண்டிருந்திருக்க மாட்டோம்.

அவை எல்லாவற்றிற்கும் பிறகு, ஒவ்வொரு தேசத்தின் முதுகெலும்பு அதனுடைய நல்ஒழுக்கங்கள் தான்.

ஒரு தேசத்தில் நல்லொழுக்கங்கள் விழுந்து போகும்போது, அந்தத் தேசம் போய் விட்டது.

தாய்மையை உடைத்துப் போடுவீர்களானால், நீங்களும் கூட உடைந்து (அழிந்து) போவீர்கள். மற்ற தேசங்கள் எல்லாமே அவ்வாறு ஆகியிருக்கின்றன, நம்முடைய தேசமும் விதிவிலக்கல்ல.

6. யுத்த கருவிகள் அவர்களுடைய கடைசி நேரத்திற்காக குவியலாக குவிக்கப்படும் போதும், இராணுவ இறுதிச் சடங்களில் ஒலிக்கப்படும் இசை கடைசி நேரத்திற்காக ஒலிக்கப்படும்போதும், அந்த நேரம் மகத்தான நேரம் என்று

**நம்புகிறோம், அது சீக்கிரத்தில் நடக்கும், அது மிக அருகாமையில் உள்ளது, அப்போது இயேசு இராஜா வந்து, இங்கே பூமியின்மேல் ஆளுகையை ஏற்றுக்கொள்வார். நாமெல்லாரும் அதற்காக எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.**

ஆகையால் தான் இந்தக் கன்வென்சன் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன, ஆகையால் தான் நாமெல்லாரும் ஒன்றாகக் கூடிவந்திருக்கிறோம், ஏனென்றால் பேசுவதற்கு நமக்குப் பொதுவான காரியங்கள் உள்ளன.

**நிச்சயமாக நம்முடைய பேச்சின் முக்கிய கருத்து தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவாகத்தான் இருக்கிறது.**

இப்பொழுது இருக்கிற இந்தக் காரியங்களில், நான் தற்போதைய நேரங்களை நோக்கிப் பார்த்திருந்தால், நான் மிகவும் ஊக்கமிழந்த ஒரு நபராக இருந்திருப்பேன். ஆனால் ஒருசமயம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொண்டேன், ஒரு மனிதன் கூற நான் கேட்ட ஒரு சிறு காரியம் தான் அது.

மிகச்சிறப்பாக ஓட்டுபவருக்கு அவர்கள் ஒரு சுவின் மிதிவண்டியை கொடுக்கப் போவதாக இருந்தனர். நான் அதை இந்தச் சபையிலோ அல்லது இந்த ஜனங்கள் மத்தியிலோ எப்பொழுதாவது மேற்கோள் காட்டினேனா அல்லது இல்லையா என்று தெரியவில்லை.

7. ஒரு-ஒரு பன்னிரண்டு அங்குல மரப்பலகையில் 100 கெஜ தூரம் ஓட்ட முடியும் பையன் ஒரு-ஒரு புதிய சுவின் மிதிவண்டியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பட்டணத்தைச் சுற்றிலுமுள்ள பையன்களில் அநேகர்,

அவர்களால் அதை ஓட்ட முடியும் என்றும், அந்தப் போட்டியில் வெற்றி பெறப்போவதாகவும் நினைத்தனர்.

அங்கே அவர்களிடம் ஒரு சிறு பையன் இருந்தான், அவன் ஒருவிதத்தில் பெண்தன்மை கொண்ட ஒரு சிறுவனாயிருந்தான்.

அவன் அதில் வெற்றி பெறப்போவதில்லை என்று அவர்கள் நிச்சயமாயிருந்தனர்.

இவ்வாறாக எல்லா பையன்களும் அவர்களுடைய...ல் ஏறினார்கள். ஒருவர் பின் ஒருவராக அதை ஓட்ட முயற்சித்தார்கள், பெண்தன்மை கொண்ட அந்தச்

சிறு பையனைத் தவிர மற்ற எல்லாரும் அதை விட்டு கீழே விழுந்து விட்டார்கள்.

அவன் அந்த மரப்பலகையின் இறுதிவரை ஓட்டிச் சென்று, இறங்கி, அந்த சுவின் மிதிவண்டியை வென்றான்.

உடனே மற்ற பையன்கள் எல்லாரும் சுற்றி வந்து, "நீ எவ்வாறு அதைச் செய்தாய்?" என்று கேட்டார்கள்.

அவன், "இப்பொழுது, தோழர்களே, நீங்கள் என்ன செய்தீர்கள் என்று நான் உங்களிடம் கூறுகிறேன். அவர்கள் உங்களைத் துவக்கி வைத்தபோது..."

(அவர்கள் இவர்களை சற்று தள்ளிவிட்டனர், அப்பொழுது அவர்களால் ஓட்ட ஆரம்பிக்க முடிந்தது, அவர்களைப் பிடித்து, அவர்களைத் துவங்க விட்டனர்.)

"நீங்கள் இவ்விதமாக கீழே நோக்கிப் பார்த்துக்கொண்டே, உங்கள் மிதிவண்டியை பலகையின்மேல் தொடர்ந்து ஓட்ட முயற்சித்துக் கொண்டிருந்தீர்கள்" என்றான்.

ஆனால், "நானோ ஒருபோதும் இங்கே கீழே கவனிக்கவில்லை. நான்... பாருங்கள், நீங்கள் அதைச் செய்கிறீர்கள், அது உங்களைப் பதட்டமடையச் செய்து, நீங்கள்

விழுந்து விடுகிறீர்கள். நானோ என்னுடைய கண்களை அந்த முடிவின்மேல் வைத்து, எல்லையை நோக்கியே தொடர்ந்து போய்க் கொண்டிருந்தேன்" என்றான்.

**அதுதான் அது. சகோதரர்களே, நாம் சரியாக இங்கே சுற்றிலும் நோக்கிப் பார்ப்போமேயானால், நாம் பதட்டமடைந்து விடுவோம், ஆனால் நாம் அந்த முடிவை, இறுதியை நோக்கிப் பார்ப்போம்.**


